2009 ஜூலை 9]

அப்படிப்பட்ட நீதி போதனை வகுப்புகளில் இந்த child abuse, drug abuse ஆகியவற்றைக் குறித்தும் மாணவர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்காக நிச்சயமாக அரசு நடவடிக்கையினை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

108—

சாலை வசதி

***39979—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, சில்லார அள்ளியிலிருந்து பால்சிலம்பு மலைப் பகுதிக்கு சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் மாத்திரம்தான், தாழ்த்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் மக்கள் போன்றவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்படுகின்றன. குறிப்பாக, மலைவாழ் மக்கள், சுதந்திரம் அடைந்து 62 ஆண்டுகளாகியும் ஆடு மாடுகளைப்போல வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சாலை வசதியோ, போக்குவரத்து வசதியோ மற்றும் அடிப்படை வசதியோ இல்லாத கிராமங்கள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக, பால்சிலம்பு போன்ற பகுதிகளில் பிரசவ காலங்களில் மருத்துவமனைக்கு வரவேண்டுமானால், தொட்டில் கட்டித்தான் வரவேண்டிய கட்டாயச் சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களும் இந்த மண்ணிலே வாழப் பிறந்தவர்கள் என்ற நிலையில்

மலைவாழ் மக்களுக்கு ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி அத்தனைப் பகுதி மக்களுக்கும் சாலை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுத்திட இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற பால்சிலம்பு பகுதிக்குச் சாலை, அவருடைய தொகுதியில், மொரப்பூர் ஒன்றியத்தில் சில்லார அள்ளியில் இருந்து மலைப் பகுதிக்கு 5.5 கிலோ மீட்டர் சாலை அமைக்க வேண்டும். அதிலே 2 கிலோ மீட்டர் காப்புக் காட்டிற்கு வெளியில் இருக்கிறது. 3.5 கிலோ மீட்டர் காப்புக் காட்டின் உள்ளே செல்ல வேண்டும். அதிலே, ஊனிசேனஅள்ளி காப்புக் காட்டிலே 1.5 கிலோ மீட்டரும், அதேபோல, வத்தமலைக் காப்புக் காட்டிலே 1.5 கிலோ மீட்டரும், மூக்கானூர் காப்புக் காட்டிலே அரை கிலோ மீட்டரும் செல்ல வேண்டும். அப்படி பாதை அமைத்து அந்த மலைக்குச் செல்ல வேண்டுமேயானால், அனுமதி பெற வேண்டும். ஊனிசேனஅள்ளி காப்புக் காட்டிலே அனுமதிக்கப்பட்ட வழித்தடம் இல்லை. வத்தமலையிலே 5 கிலோ மீட்டருக்கும், மூக்கானூரிலே 5.4 கிலோ மீட்டருக்கும் இருக்கிறது. எனவே, 8 மீட்டர் அகலத்திற்கு சாலை அமைப்பதற்கு மைய அரசினுடைய அனுமதியைப் பெற வேண்டும். அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது உண்மை. அதனாலேதான் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, பல்வேறு இடங்களிலே சாலை அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. சென்ற அரசிலே, 6 இடங்களுக்கு மட்டுமே 5 ஆண்டிலே அனுமதி அளித்திருந்தார்கள். ஆனால், மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசிலே, இந்த 3 ஆண்டு காலத்திலே 12 இடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன் அவர்கள்.

2009 ஜூலை 9]

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில், மலைவாழ் மக்கள் அதிகமாக வாழ்கிறார்கள். குறிப்பாக, சித்தேரி ஊராட்சியில் மாத்திரம் 40-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருக்கின்றன. அதைப்போல, வத்தல்மலை, சிட்லி போன்ற பகுதிகள் மலைவாழ் மக்கள் வாழ்கிற பகுதியாக இருக்கிறது. தொடர்ந்து அந்தப் பகுதி மக்கள் சாலை வசதி வேண்டுமென்று ஆண்டாண்டுதோறும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி சாலை வசதி அமைக்க வேண்டுமானால், வனத் துறையினுடைய அனுமதி தேவைப்படுகிறது. கேட்கிறபொழுதெல்லாம் மத்திய அரசினுடைய அனுமதி வேண்டுமென்ற நிலைதான் தொடர்ந்து இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், இதை ஒரு தனி சிறப்பு நிகழ்வாகக் கருதி, எங்கெங்கே குறைந்தபட்சம் 500 மக்கள் வாழ்கிறார்களோ, அந்தப் பகுதிகளுக்குச் சாலை அமைத்துத் தருவதற்கு, ஒன்றிற்கு இரண்டு மடங்காக வனத் துறைக்கு நிலத்தை ஒப்படைத்து, அந்தப் பகுதிகளில் சாலை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்பதையும், அதேநேரத்தில், வனத் துறைமூலம் பணம் இல்லையென்று சொன்னாலும், மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் அல்லது வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்மூலம் அல்லது உள்ளாட்சி அமைப்புகள்மூலம் அல்லது சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதிமூலமாக, இன்றியமையாத நிலைக்குரிய ஊர்களுக்கு சாலை அமைத்துத் தந்து, அந்த மக்களைக் காப்பாற்ற அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவருடைய தொகுதியிலேகூட, அவர் குறிப்பிட்டிருக்கின்ற பிரியூர், வத்தமலைப் பகுதிகளுக்கு சாலை அமைக்க ஒரு கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 35 ஹெக்டர் நிலம் மாற்றப்படுவதற்கு 15 கருத்துருக்களுக்கு அனுமதி வேண்டுமென்று கேட்டு அனுமதி பெறப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் அனுமதி பெற்று, தேனி மாவட்டத்தில், கம்பத்து மேட்டிலிருந்து சாக்குளத்து மேட்டிற்கும், அதைப்போல,

வருச நாட்டிலிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கும், நீலகிரி மாவட்டத்திலே, சிரியலூர் புதுப்பட்டிக்கும், நாமக்கல் மாவட்டத்தில் முள்ளுக்குறிச்சி நரியங்காட்டிற்கும், திருச்சி மாவட்டத்தில் புளியஞ்சோலைக்கும், பலாத்தூர்பட்டிக்கும் என்று 5 திட்டங்கள் 5 இடங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 15 கருத்துருக்களை அங்கே அனுப்பியிருக்கிறோம். 1980 ஆம் ஆண்டின் வனப் பாதுகாப்புச் சட்டம் அவ்வளவு கடுமையாக இருக்கிறது. வனங்கள் அழிக்கப்படக் கூடாது, வனங்கள் பாதுக்காக்கப்பட வேண்டும் என்பதற்காக இவ்வளவு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு 5-வது முறையாக பொறுப்பேற்றதற்குப் பிறகு, முக்கியத்துவத்தைக் கருதி, பல இடங்களிலே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இதுவரை 43 இடங்களிலே, 266 கிலோ மீட்டர் சாலை அமைப்பதற்கு, மற்ற துறைகளுக்கெல்லாம் நாங்கள் அனுமதி வழங்கியிருக்கிறோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு டி. இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

109—

உண்டி உறைவிடப் பள்ளி

***31084—திரு டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மஞ்சுகொண்டப்பள்ளி மற்றும் தொட்டமஞ்சி ஆகிய ஊர்களில் பழங்குடியின மாணவர்களுக்கு உண்டி உறைவிடப் பள்ளி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அ) மற்றும் ஆ) தளி தொகுதி, மஞ்சுகொண்டப்பள்ளி மற்றும் தொட்டமஞ்சி ஆகிய இடங்களை ஒருங்கிணைத்து, பெட்டமுகிலாளம்